உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் எ | பிரசோற்பத்தி, ஐப்பசி. | மலர் எ

உ

வேழக் கரும்பு.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

I

இலக்கணநூலார் அனைவரானும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு உதாரணங் காட்டப்படுமவற்றுள் ஒன்று வேழக் கரும்பு என்னும் இத்தொகைச்சொல்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை, இன்னதிதுவென, விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிப் பிறவற்றின் பொதுமைநீக்கிச் சாரைப் பாம்பு என்பதுபோல வருவனவும், அவ்வாறு விசேடித்துப் பொதுமைநீக்காது, இடைச்சோற்கிளவி என்பதுபோல வருவனவும் என இருவகைப்படும்.

வேழக்கரும்பு என்னும் சொல்லோ இவ்விருவகையானும் வழங்குவதாம். வேழம் என்னும் பலபொருளொருசொல், கரும்பையும் குறிக்குமாதலால் வேழம், கரும்பு என்னும் இரு சொல்லும் ஒட்டி பொருசொன்னீர்மையவாய் வேழக்கரும்பு

எனஇயைந்து கரும்பையே குறித்துவரும் இப்பொருளில், வேழ மென்னும் கரும்பை விசேடித்து அதன்பொதுமைபை நீக்காது "இடைச்சொற்கிளவி" யென்பதுபோல வந்தது.

இது இப்பொருட்டு ஆதலே

"இந்தக் கன்னி முழுமதிநோக்கெய்திச் செவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த தக்க வரவின் வலிசார்ந்து
முந்தைக் கொடிமீ னத்தலைவன் முனிவராகும் பகைவெல்லக்
கந்தப் பகழி சிலவேழக் கருப்புச் சிலையிற் றொடுத்தனனால்"

என்னும் பிரபுலிங்கலீலைச் செய்யுளால் அறியலாம்.

இனி, வேழம் என்னும் இச்சொல் முன்போல இயைந்து, கரும்பை விசேடித்து அதன்பொதுமையை நீக்கிச் 'சாரைப் பாம்பு' என்பது போலவும்வரும். கரும்பின்பொதுமையாவன: கரும்பு, வேழக்கரும்பு, பேய்க்கரும்பு என்பன. எனவே வேழக்கரும்பு என்பது இங்குக் கரும்பைக்குறியாமல் அப்பெய ருடைய பிறிதொரு செடியைக்குறித்தும் வந்ததாம். இதுகரும் பின்வேறாயது என்பதனை,

"வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்ற ரேனாதி நாதனார்

என்னும் பெரியபுராணச் செய்யுளால் அறியலாம்.

II

வேழக்கரும்பு என்பது ஒருசெடி. இது, நீர்வளமுடைய நிலங்களில் தானாய் உண்டாவது. ஆற்றங் கரைகளிலும் வயலோரங்களிலும், நீர்நிலையின் பக்கங்களிலும், இவற்றை யடுத்த விடுநிலங்களிலும் இது செழித்து வளர்வதைக் காண லாம்.

"அடைகரை வேழம்"

"மலிர்நிறைப்....புனலாடு மகளிர்க்குப் புணர்துணை
"வேழம்—அலமரும் கழனி" [யுதவும்வேழம்"

"வயலை வேழஞ் சுற்றும் துறை"
"வேழம் பூக்கும் துறை"
"தாமரைப் பூச்சினை சீக்கும் வேழத்துறை"
"வேழந்தீண்டி வண்டளிர் நுடங்கும் துறை"
"தண்பொழில் வேழவெண் பூச்சீக்கும் ஊர்"
என்பன ஐங்குறுநூற்றுச்செய்யுட்கள்.

"வேழப் பழனத்து நூழிலாட்டு ஓதை" என்பது மதுரைக்காஞ்சி. (258 அடி)

இது, திரட்சி, பருமன் முதலியவற்றில் தன் பெயர்க்கேற்கக் கரும்புபோற் காணப்படினும், கரும்பினும் வேறுபாடுடையது; கரும்பிற்கு உள்ளீடு உண்டு; இதற்கு உள்ளீடு இல்லை; உட்புறம் புழையுடைதாய்க் கணுக்களோடு இருப்பதால் இது மூங்கிலைப் போல்வது.

இதன் பூ, கரும்பின் பூவைப்போன்றே நீண்டு, வளைந்து வெண்மை நிறமுடையதாய், மணமின்றி யிருக்கும்.

"வேழங் கரும்பி னலமரும் கழனி"
"வேழத்துத் தூம்புடைத் திரள்கால்"
"காம்புகண் டன்ன தூம்புடை வேழம்"
"கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும் துறைகேழூரன்"
"கொடிப்பூ வேழம்"
"வேழவெண்பூப் பகரும் தண்துறை"
"வேழ வெண்பூக் குருகிற்றேன்று மூரன்"
என்பன ஐங்குறுநூற்றுச் செய்யுட்கள்.

இதனைக் கொறுக்கச்சி யெனவும், இதன் கோலை கொறுக்காந்தட்டையெனவும் வழங்குவர். இச் சொல்லுக்கு 'கொறுக்கச்சி' எனறே நச்சினர்க்கினியர் மதுரைக்காஞ்சியி லுரைத்தனர். சில பக்கங்களில், இதனை 'வேழ், வேழ்க்குச்சி யெனவும் வழங்குவர். இது புல்லின் வகையுளடங்கும். "புறக்கால் ஆம்பல் முதலியனவும் புல்லெனப்பட்டடங்கி யவற்றின். பெயரும் பெறும்" என்பர் பேராசிரியர் (மரபியல்-87)

இதன் கழிகள், பந்தரிடுவதற்கும், படல்கள்கட்டுவதற்கும் படர்கொடிகளுக்குக் கொழுகொம்பு ஊன்றுவதற்கும் உதவுகின்றன. இவற்றைச் சிறுகயிற்ருற்பிணைத்து மணல் சலிப்பதற்கும், பிறவற்றிற்கும் பயன்பெறுத்திக் கொள்கின்றனர். கூரைகளுக்கு இவை, வரிச்சற்பிடித்தற்கு உதவினவென்று

"வேழநிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழைமுடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிரைக் குரம்பை" என்னும்

பெரும்பாணாற்றுப் படையின் 263-5 அடிகள் தெரிவிக்கின்றன.

மலைவாழ்நர், மூங்கிற்குழாய்களில் தேன் முதலியவற்றைப் பெய்து வைத்துக்கொள்வதுபோலவே, வயல் வாழ்நர் சிறுமகளிரும், இதனைக் கணுக்கள்வரை நறுக்கி, அவற்றில், தம் கண்ணுக்கணியும் அஞ்சனத்தைப்பெய்து வைத்துக்கொள்வது வழக்கமென்று,

"ஒங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்காற்
சிறுதொழு மகளி ரஞ்சனம் பெய்யும்
பூக்கஞ லூரனை யுள்ளிப்
பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே"

என்னும் ஐங்குறுநூற்றுச்செய்யுள் தெரிவிக்கின்றது.

நீராடும் மகளிர், இவற்றின் தழைகளைப் பறித்தெறிந்து விளையாடப் பலவிதத்தும் இது பயன்படுமென்று,

"மணலாடு மலிர்நிறை விரும்பிய வொண்டழைப்
புனலாடு மகளிர்க்குப் புணர்துணை யுதவும்
வேழ மூதூ ரூரன்
ஊர னாயினு மூரனல் லன்னே"

என்னும் அந்நூற் செய்யுள் தெரிவிக்கின்றது. ஒவ்வொருதிணையிலும், அவற்றின் கருப்பொருள் முதலியவற்றிற் சிலஎடுத்து அவை யொவ்வொன்றினைப்பற்றியும் கூறிய பப்பத்துச் சிற்றகவல்களாற்றொகுத்த ஐங்குறுநூற்றில், கேழல், குரங்கு, கிளி, மயில் இவற்றைக் குறிஞ்சித்திணைக்கும், ஞாழல், குருகு காக்கை

நெய்தல், வளை இவற்றை நெய்தற்றிணைக்குங்கொண்டு தொகுத்திருத்தல்போலவே, மருதத்திணைக்கும், கள்வன், எருமையென்ற இக்கருப்பொருளினும், இவ்வேழப்பத்தே முதற்கண் கொண்டு வைக்கப்பட்டிருக்கின்றது.

III

இது ஒரு சிறு செடியேயாயினும், இவ்வாசிரியர் இதனையெடுத்துக்கொண்டு இதனைப்பற்றிய பல திறன்களேயும் கூறுவதோடு, பலநயங்களும் அமையக் கவி யாத்திருப்பதும், அவர்தம் அரும்புலமையினை நன்கு புலப்படுத்தும்:—அவற்றுள், பசிய புதர்களினிடையே மேலெழுந்து வளைந்து அசையும் இதன் வெண்பூ, நீலநிறத்தையுடைய வானிற் பறக்கும் ஒரு வெள்ளிய பறவையையொத்திருக்குமென்னும் கருத்தையுடைய

"புதன்மிசை நுடங்கும் வேழவெண்பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்"

என்னும் பாடலும் ஒன்றாம். இன்னும்,

"பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்
தண்டுறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்தும் துயிலறி யலரே"

என்னும் பாடலில், இதன் பூவைக் குதிரையின் பிடரிமயிருக்கு உவமை கூறியிருப்பது நேரிற்கண்டின்புறத்தக்கது. அன்றியும்,

இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழம்
கரும்பி னலமருங் கழனி யூரன்

என்ற பாடலில், கழனிகளில், இவை, கரும்புதாமோ, அல்லது வேழமோ என்று கண்டார் அயிர்க்கும்படி செழித்துள்ளன வென்று கூறியிருப்பதும், இவையனைத்தும் வீண் கற்பனைகளாய்விடாமல் ஒவ்வொன்றிலும், உரிய உள்ளுறைப்பொருள் தோன்றுமாறு கூறியிருப்பதும் பிறவும் படித்து மகிழத்தக்கதாம்.

கரைசேர் வேழங் கரும்பிற் பூக்கும்
துறைகே ழூரன் கொடுமை நன்று

மாற்றுக தில்ல யாமே
தோற்க தில்லவென் றடமென் றோளே *

என்னும் இப்பாடலின் முதலடிதோற்றும் உள்ளுறையைப் பேராசிரியர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார். அது 'இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்குமெனவே, அவற்றிற்கும் இழிபு உயர்வு ஆமென்பதொன்றில்லை; எல்லாருமின்பங் கோடற்குரியர் தலைமகற்கு; யாமும் பரத்தையரும் ஒத்தனம்' என்பதாம் (உவமவியல்—24).

சில பாடல்களில், முதல், கரு, உரிப்பொருள்களுள் இரண்டொன்றே கூறப்பட்டிருக்கும்; சிலபாடல்கள் நாடக வழக்கே கூறும்; சில உலகியல் வழக்கே கூறும்; இவையனைத்தும் வரக் கூறவேண்டின், செய்யுள்நீளும். அங்ஙனம் நீளாத ஒருசிறு அகவலில் இவையனைத்தும் வரக்கூறிய இவர்பாடலை ஆசிரியர் நச்சினார்க்கினியர்கொண்டு அகத்திணையியலில் (53) உதாரணங் காட்டியிருக்கின்றனர். அது :—

"மணைநடு வயலை வேழஞ் சுற்றும்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் தடமென் றோளே" என்பதாம்.

இன்னும், இவ்வேழப்பத்திலிருந்து அவர் (நச்சினார்க்கினியர்) காட்டும் பிறபாடல்களும் உண்டு. அவற்றுள், தலைவி தலைவனை யுவத்தலுக்கும் பிரித்தலுக்கும் முறையே காட்டிய

'கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொள் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே' என்பதும்,

புதன்மிசை நுடங்கும் வேழவெண் பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்
புதுவோர் மேவல னாகலின்
வறிதா கின்றென் மடங்கெழு நெஞ்சே

என்பதும், பிறவும் படித்தின்புறற் பாலவாம்.

---

* இப்பாடலின் பின்னிரண்டடியும் மாற்றிக் கூறப்பட்டுள்ளது.

IV.

ஒரு சிறுசெழியாகிய இதனைக்கொண்டு இதன் பலதிறன்களையும் கூறும் முகத்தான் உள்ளுறைதோன்ற இன்சுவைக் கவிகள் பாடிய இவ்வாசிரியரின் மாண்புகளில், ஒன்றுகிய-னன்றியறிந்து பொருளினியல்களை யுணர்ந்துரைக்கும் இத்திறனைநோக்கில், இவர்க்கு ஓரம்போகியார் என்னும் பெயரினும் ஒரேர் போகியார் என்னும் பெயரே தகுமென்று தோன்றுகிறது.

பரணர்.

திரு. வித்துவான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி. துணர். 7, பக்கம். 272.)

இப்பத்தின் முதற்பாட்டில், இவர் செங்குட்டுவனை நோக்கித் "திண்டேர் வசையில் நெடுந்தகை! ஒன்று இரண்டல்ல பல வழிகளைக் கடந்து யான் நின்னைக் காண்டற்கு வந்தேன்" என்று கூறி அவன் கடல்பிறக் கோட்டிய வென்றியைச் சிறப்பித்துக் கூறுகின்றூர். இக் கருப்பொருட்குத் துணையாகத் தம்முடன் வருவாரையும், வழியினது ஏதமும் உடன் கூறுகின்றூர்.

இத்துணைப் பொருள்களைப் பாட்டின் முதற்கண் நிறுத்தி,

"புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய
வணர்அமை நல்யாழ் இளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவில் தகைத்த துறைகூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுட் பழிச்ச"

எனத் தன்னுடன் வரும் யாழோரையும் ஆடலில் வல்ல இளை யரையும் கூறினர். இதன்கருத்து, யாழ் வல்ல இளையர் *வணர் பொருந்திய பேரியாழ் தாங்கிவர, முழவு பதலை முதலிய பல வாச்சியங்களைத் தூம்பு என்னும் வாச்சியத்தோடு ஒருங்கு சேர்த்துக் காவடியின் ஒருபக்கத்தும் மற்றொருபக்கத்து ஆடற் றுறைக்கு வேண்டுவன வெல்லாம் கூடின முட்டினையும் வைத்து, ஆடற்றுறையில் வல்ல இளைஞர் தாம் செல்லும் வழிகளில் உளவாகும் ஏதம் வாராமைப் பொருட்டுக் கடவுளைப் பரவி வரத் தாம் வந்தார் என்பது. பின்னர்,

> "மறப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு
> வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
> பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
> மாயிருஞ் சென்னி அணிபெற மிலைச்சிச்
> சேஎ ருற்ற செல்படை மறவர்
> தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு
> வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்
> மழைபெயல் மாறிய கழைதிரங்கு அத்தம்"

என வழியி லுளவாகும் ஏதம் கூறுகின்றார். இதன் கருத்து வயக்களிறு என்று மலையைச் சேர வெழுந்த வேங்கை மரத் தினைப் புலியின் குழுவெனக் கருதி, அதன் பூக்கள் நிறைந்த கிளையை வளைத்து முறித்துத் தன் பெரிய தலையில் அழகு பட அணிந்து (சுமந்து) முனையில் பொருந்திச் செல்லும் படை வீரர் வலத்தே தண்டேந்திப் போர்செய்ய எதிர்ந்தது போலச் சுரபுன்னைகள் நிறைந்த அகன்ற காட்டகம் ஒலிக்கும்படிப் பிளிறுவதும், மழைபெய்து மாறிய மூங்கில் திரங்கி விளங்குவது மாகிய வழி என்பது.

---

* வணர், யாழுறுப்பினுள் ஒன்று. தீந்தொடை, யாழினிசை. தீந் தொடை, யாழ் எனல், "தீந்தொடைச் செவ்வழிப் பாலை" (சிலப்-கானல்) எனவும், "தேவர் பண்ணிய தீந்தொடையின் சுவை" (சிந்தா. 1328) எனவும் வருதலா லுணர்க.

இது கூறினவர், மேலே, அத்தங்கள் "ஒன்றிரண்டல பல கழிந்து, திண்டேர்—வரையில் கெடுந்தகை காண்கு வந்திசினே" எனவரும் கருப்பொருளை யமைத்துப் பின் கடல் பிறக் கோட்டிய செய்தியைச் சிறப்பிக்கின்றார்.

"* தாவல் உய்யுமோ மற்றே, தாவாது
† வஞ்சின முடித்த ஒன்றுமொழி மறவர்
முரசுடைப் பெருஞ்சமத்து அரசுபடக் கடந்து
‡ வெவ்வ ரோச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி உலக்கையின் இருந்தலை யிடித்து
§ வைகார்ப் பெழுந்த மைபடு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்புடை வியன்கண்
வலம்படு சீர்த்தி ஒருங்குடன் இயைந்து
$ காலுளைக் கடும்பிசிர் உடைய வாலுளைக்
கடும்பரிப் புரவி யூர்ந்தநின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே,"

என்பது அப்பகுதி. இதன் கருத்து, மாற்றார் மண்டலங்களைக் கொள்வேம் என வஞ்சினங் கூறிப் பின் அது தப்பாது முடித்த வாய்மையினையுடைய வீரர் வெற்றி முரசு ஒலிக்கும் பெரும் போரின்கண் நண்பராய்த் துணைவந்த அரசர் மேன்மேலும் உயர்வு பெருகவும், பகைவராய் எதிர்த்துவந்த தெவ்வரசர்களின் பெரிய (கரிய வெனினுமாம்) தலைகளை மிளகுகளைக் கொடிகளி லிருந்து உதிர்த்தற்கு வீசும் உலக்கையினால் இடித்து

---

* "தாவ லுய்யுமோ என்றது வருத்தத்தில் நின்று நீங்குமோ எ-று. தாவென்னும் உரிச்சொல் தொழிற்பெயர்ப்பட்டுத் தாவலென நின்றது.

† வஞ்சின முடித்தல்—மாற்றார் மண்டலங்களைக்கொண்டு முடித்தல்.

‡ வெம்மை யென்னும் (வேண்டற் பொருளில் வரும்) பண்பிற்கு வெவ்வ ரென்பதும் ஒரு வாய்பாடு.

§ வைகார்ப்பு—ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். மைபடுபரப்பு—கடற்பரப்பு.

$ காலுளை யென்றது காற்றானே உளை தலையுடைய என்றவாறு. உளைதல்—விடுபடுதல்."—ப. உரை.

அவர்கள் கெடுதலால் வென்றி யெய்தவும், "ஒருகாலும் இடையறாத ஆரவாரத்தினையுடைய கருங்கடற் பரப்பில் வேலெடுத்தெறிதல் பொருந்தவும், குறுந்தடி கொண்ட அகன்ற கண்ணினையுடைய முரசு எழுந்தொலிக்கும் வென்றிதரும் கீர்த்தி ஒருங்கே தோன்றி நிலவவும், காற்றால் விடுபட்டுப் பறக்கும் (புகைப்படலம் போல் பறக்கும்) நீர்த்துளிகளாகிய பிசிர் எங்கும் பரவும்படி ஒலிக்கின்ற அலைபொருந்திய குளிர்ந்த கடலைப் பிறக்கிட ஓட்டிய நின்னுடைய தாள்கள் வருந்துதலில் நின்று நீங்குமோ என்பதாம். இஃது உரைகாரர் குறித்த முறையே கொண்ட பொருள்.

பாட்டுக் கிடந்த முறையே காணின், மாற்றார் மண்டலங்களைக் கொண்டு முடித்த வாய்மையினையுடைய வீரர் முரசு பொருந்திய பெரிய போரின்கண் அரசர் பலரை வென்று, அவருள் நட்பு விரும்பிய வேந்தர்க்கு உயர்வு பெருகவும், விரும்பாத தெவ்வரசரின் பெரிய தலைகளை மிளகெறி உலக்கையால் இடித்து அவர் கெடவும் செய்து, அதனோடமையாது, இடையறாத ஆரவாரத்தினையுடைய கருங்கடற் பரப்பால், எடுத்தெறிதல் பொருந்திய குறுந்தடி கொண்ட அகன்ற கண்ணினையுடைய முரசெழுந் தொலிக்கும் வென்றிதரும் கீர்த்தி ஒருங்கு நிலவ, காற்றால் விடுபட்டுப் பறக்கும் நீர்த்துளிகளாகிய பிசிர் எங்கும் பரவும்படி ஒலிக்கின்ற அலை பொருந்திய குளிர்ந்த கடலைப் பிறக்கிட ஓட்டிய, வெள்ளிய தலையாட்ட மணிந்த விரைந்த செலவினையுடைய குதிரையூர்ந்த, தாள்கள் வருந்துதலில் நின்று நீங்குமோ என்பது பொருளாகும்.

இனி, இதன் இரண்டாம்பாட்டு, "பெரும! நன்னுதல் கணவ! அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ!" நீ கோடியர் பெருங்கிளை வாழத், தந்த களிமாக்களை எண்ணின், அவை புணரியிற் றோன்றும் நீர்த்திவலைகளினும் பலவாம்" என்பது பொருளாக வந்தது. இதற்குப் புடைப்பொருள்களாக அமைந்தன, வீரர்மறமும், கோடியர் பெருங்கிளையை யருளுதலும், வென்றிபரவுதலுமாம்.

இவற்றுள், வீரர்மறம்,

“ இரும்பனம் புடையல் ஈகை வான்கழல்
மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
* அம்புசேர் உடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
யன்னோர் ” என வருகின்றது.

இதன்பொருள், பெரிய பனந்தோட்டாற் றொடுத்த மாலையினையும் பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழலையும் மீன் கவரும் சுழற்சியினைச் சிரல் குளிர்ந்த குளத்திலே மூழ்கி எழுகின்ற காலத்து, அதன் வாயலகை ஒக்கப் புண்களை இழைகொள்கின்ற காலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியின் தழும்பும், புண்ணுலாகிய வடுவும் பரந்த மார்பினையும் அம்பாலுற்ற தழும்பு சேர்ந்த உடம்பினையு முடையாராய்த் தம்மைச் சேர்ந்தாரோ டன்றி அவ்வகையின ரல்லாப் பிறரோடு “ஒத்த வீரமுடைய ரல்லர்” எனத் தும்பை சூடிப் பொருதலைச் செய்யாத மாட்சியினையுடையோர் என்பதாம்.

இனி, அதன்பின்னதாய கோடியர் பெருங்கிளையை அருளுமாறு,

“ மைந்துடை நல்லமர்க் கடந்து வலந்தரீஇ
† இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கைத்
தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்

* இதற்கு, “அரசன் வீரரில் அம்புசேர் உடம்பினராய்த் தம்மோடு வீரம் ஒத்தாரோ டல்லாது போர்குறித்தார் தம்மோடு தும்பை சூடாமல் மாறுபட்ட மாட்சிமையுடைய என்றவாறு.” பழைய உரைகாரர்.

† இதற்கு, “மது நுகர்வுழி இடையிடைக் கறித்து இன்புறுதற் பொருட்டு இஞ்சியும், மோந்து இன்புறுதற் பொருட்டுப் பூவுமாக விரவித் தொடுத்த மாலை பூட்டி, அவ்வாறு பயன் கோடற்குச் சாந்தும் புறத் தெறிந்த எ-று. பழையவுரைகாரர்.

ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ ஆடியல்
உளையவிர் கலிமாப் பொழிந்தவை யெண்ணின்
....
மாயிருந் தெண்கடல் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குரூஉப்பிசிர் உடை-யத்
தண்பல வரூஉம் புணரியிற் பலவே."

எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இதன்பொருள், வலிபொருந்திய நல்ல போரைச் செய்து வெற்றிபெற்று, அதனைப் பாடும் கூத்தர்க்கு அவரது பெரிய சுற்றம் வாழ்வுறும்வண்ணம், இஞ்சிப்பூவும் பிற நறிய பூவுமாக விரவித் தொடுத்த பசிய மாலை சூட்டி, புறத்தே சந்தனமும் பூசின மதுக்குடம் அசைந் தாடும் சமனில்லா இருக்கைக்கண் வைத்த மிக்க சுவை நிறைந்த நீலமணி போலும் கள்ளினைத் தனக்கென ஓம்பாது செய்யும் ஈகைக்குணத்தால், மிகத்தந்து அதன்மேலும் கொடுக் கப்பட்ட வெற்றியுறும் தலையாட்டத்தால் பொலியும் குதிரை களை எண்ணி யறியலுறின், அவை அளவுபடாமையான், பெரிய கரிய தெளிந்த கடலின் நுரையின் நிறம் பெற்ற பிசிர் எங்கும் பரவத் தண்ணியவும் பலவுமாய் வரும் அலைகளினும் பலவாகும் என்பது.

இனி, இதன்கட் கோடியர் பாடுதற்குப் பொருளா யமைந்த வென்றிச் சிறப்பினை,

"மன்பதை மருள அரசுபடக் கடந்து
முந்துவினை யெதிர்வரப் பெறுதல் காணியர்
ஒளிறுநிலை யுயர்மருப் பேந்திய களிறுஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்தநின்
தேரொடு சுற்றம் உலகுடன் மூய"

என்பதனாற் கூறுகின்றார். இதன்பொருள், காணும் மக்கள் மருட்சி கொள்ளும்படி எதிர்த்த அரசர் கெட வென்று அவர் முன்னுற்ற போர்ச்செயலை எதிர்பெய்துகொண்டு வர, அதனை ஏற்றுப் பெறுதலைக் காண்டற்கு மன்னர் பலர் மானமுடைய

வீரருடன் விளக்கமுறும் நிலையினையுடைய உயர்ந்த கொம் பேந்திய யானையேறிப் போந்து எத்துதலைச் செய்ய, (பரவி வாழ்த்த எனினுமாம்) நினக்குச் சுற்றமாயினர் தேருடன் உலகுமுற்றும் நெருங்க, கோடியர்க்கு மாப் பொழிந்தனை என்பதாம்.

இனி, இதன்மூன்றாம்பாட்டுள், ஆசிரியர் பரணர், "போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ! தொலைபாக் கற்ப! வண்கை வேந்தே! எனுவேணியெனச் சிறப்பிக்கப்பெறும் கோக்காலி பின்மேல்வைத்த குடத்திலுள்ள கள்ளினைக் கூத்தருண்டுமகிழும் நின் ஆரவாரமான மகிழ்ச்சிக்கண் நின்செல்வநிலை கண்டேம்" என்று கூறுகின்றார். இதற்குத்துணையாக, அவனது தானையின் செயலும், அவனது வள்ளன்மையும் உடன்சிறப்பிக்கப்பெறு கின்றன. இவற்றுள் தானையின்செயல்,

" கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசல் மேவற் சேயிழை மகளிர்
உரல்போற் பெருங்கால் இலகுவாண் மருப்பின்
பெருங்கை மதமாப் புகுதரின், அவற்றுள்,
விருந்தின் வீழ்பிடி எண்ணுமுறை பெறாஅக்
கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை யெல்லை இமய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானை "

எனவருகின்றது. இதன்பொருள், கல்மிக்க உயரியமலையாகிய இமயம் வடதிசை யெல்லையாக, தென்திசைக்கண்ணதாய குமரி தென்திசை யெல்லையாக, இவற்றில் இடைப்பட்ட அரசர்களின் உயர்த்துச் சொல்லப்படும் நாடுகள் எல்லாவற்றையும் முரசு டைய பெரும்போரில் சிதைவுறும்படி ஆரவாரமெழவெதிர்த்து அவற்றின் பண்டையழகுகெடுத்த போர்செய்யும் தானை என்பது. இங்கு, நெடுவரையாகிய இமயத்தைச்சிறப்பிப்பார்,

அது, கொண்டையிட்ட, கருத்துவிரிந்த, கவரிபோலும் கூந்தலும் ஊசலாட்டு விருப்புமுடைய செம்மையான இழை யணிந்த மகளிர், உரல்போன்ற பெருங்காலும், விளங்கும் ஒளிபொருந்தியகொம்பும், பொருகின்ற கையும், மதமுமுடைய யானைகள் புகுந்தால், அவற்றின் தொகை யெண்ணிலடங்காமையால் தமக்கு விருந்தாகித் தாம் விரும்பும் பிடிகளையேயெண்ணி, அவற்றின் தொகையையும் நூறு, ஆயிரம், இலக்கம், கோடி, சங்கம், பற்பம் எனும் எண்ணுமுறைக்குள் அடக்கவியலாத அத்துணை யானைகளையும், கடவுளர் தங்கும் நிலைகளுமுடையதாகும் என்றார்.

இனி, அவனது வள்ளன்மையை விளக்கும்பகுதி

"இரும்பனை திரங்கப் பெரும்பெயல் ஒளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினம் திகழ
அருவி யற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்துக்
கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைப
விரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்(து)
ஆர்கலி வானம் தளிசொரிந் தாஅங்(கு)
உறுவர் ஆர ஓம்பா துண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி
ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக
துய்வீ வாகை நுண்கொடி யுழிஞை
வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே"

என்பது. இதன்பொருள், பெரியவயல்கள் உலரும்வண்ணம் மழை பொய்த்தலானும், குன்றுகள் வறியவாமாறு ஞாயிற்றின் வெயில்நெறுதலானும், அருவிகள் நீரற்றொழிந்த பெரிய வற்கடகாலத்தும், அரிய செலவினையுடைய நீர் நிறைந்த பெரிய

யாற்றின் கரையைப் புடைத்துக் கூரிய எரினுல் உழுவோர் கொன்றை மலரைச் சூட வரையின்கண் வில்லிட்டு அதிர்கின்ற சிலைத்தற்ருெழிலோடு முழங்கி நீர்மிகுந்து நிறைந்த கலிப் புடைய மேகம் மழைபெய்தாற்போலத் தன்னையுறுவோர் உணவினையொழியாது ஆரஉண்பித்தும், உண்டு மகிழ்வோர் மனங்கொள்ள நல்லகலன்களை நிறைய வழங்கியும், கின்னர மென்னும் புள்ளின் இசையெழுகின்ற சிறகினைத்தோற்பித்த யாழ்நரம்பினது இனிய குரலாற்பாடும் விறலியர், பல பிடி யானைகளைப் பெறுக என்றும், துப்பொருந்திய வாகைப்பூவினை முடிவிலேயுடைய நுண்ணிய கொடியாகிய உழிஞையைச் சூடிய வென்றி விரும்பும் உட்குப் பொருந்திய சிறப்பினையுடைய கொள்ளையாடும் வீரர் கொல்களிறுகளைப் பெறுகஎன்றும், பொதுவிடங்களையுள்ளித் தெருக்களினிடமாகப் புகுந்துசென்ற கணுக்களையுடைய நுண்ணிய பிறப்புணர்த்துங் கோலாகிய மூங்கிலேந்திப் போர்க்களம்வாழ்த்தி அதன்கட்பெற்ற வென்றி யைப்பாடும் பாணன் குதிரைகள் பெறுக என்றும் வழங்குதல் என்பது.

இனி, இதன் நான்காம்பாட்டு நெடுங்காலம் வாழ்க என வாழ்த்து முகத்தான், "அண்ணல், நின்னை யெல்லா வீரரும் சொல்லிப் புகழ்தற்குக் காரணமாகிய யாக்கையாகிய, மிக்கவலி பொருந்தி, நோயின்றியன்ற உடலினைப் பாடுமகள் காண் பாளாக, ஏனைப் பறந்தலையும், மன்னர் பலரை மறைத்த தாழி கள் நிறைந்த வன்னிமரத்துப் பொதுவிடத்து விளங்கும் இடு காடும் காணுதொழியுமாக" என்று கூறி, இவன் பாடுமகட்கு நன்கலம் வழங்குமாறும், அறுகை யென்பானைத் தழுவி மோகூர் மன்னனை வென்ற வரலாறும், பிறவும் கூறுகின்றது.

இவற்றுள், இவன் பாடுமகட்கு நன்கலம் வழங்குமாறு,

"நிலம்புடைப் பன்னவார்ப் பொடுவிசும்பு துடையூ
வான்றோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்
பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய வென்னுது ஓம்பாது வீசிக்

கலம்செலச் சுரத்தல் அல்லது கவினும்
களைகென அறியாக் கசடில் நெஞ்சத்(து)
ஆடுநடை யண்ணல்நிற் பாடுமகள் காணியர்

என வருதலானுணரப்படும். இதன் பொருள், நிலத்தை மோதி னாற்போலும் ஆர்ப்பினோடு விசும்பளாவ வுயர்ந்த தேர்மீது அவ் விசும்பின் கட்டோயும் வெற்றிக் கொடியசைய, கடத்தற்கரிய பெருமையுடையவாயினும் அவ் வமர்க்கண் வென்றுபெற்ற பொருள்கள் பெறுதற்கரியவாம் என்று கருதித் தனக்காமென ஓம்பாது வழங்கித் தன் மார்பிலணிந்த கலன்களையும் கொடுத் ததே யன்றிக் கவினையும் களைந்து ஈக என விரும்பின், அதன் நீங்ககில்லாமையை யுணராது அது செய்தற்குத் தொடங்கிய குற்றமில்லாத நெஞ்சமும், அசைந்த நடையுமுடைய அண் ணல்! நின் உடலழகை நின்னைப் பாடுமகள் காண்பாளாக என் பது. எனவே, பாடுமகள் இவனைக் கண்டு பாடலும், அவட்கு இவன் போரின்கண் வென்றுபெற்ற அணிகலன்களையும் தான் அணிந்திருந்த அணிகலன்களையும் ஈதலும், அவற்றோடமை யாது அவள் அவன்றன் மேனியழகை விரும்புதலும் பிறவும் இதன்கண் விளங்க உரைக்கப் பட்டனவாம்.

அறுகை யென்பானைத் தழுவிக் கோடலும் மோகூர் மன் னனை வென்ற வரலாறும்,

“ நுண் கொடியுழிஞை வெல்போர் அறுகை
சேண னாயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளிந்த களையாப் பூசற்(கு)
அரண்கள் தாவுநீஇ அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த (ஆடு நடை அண்ணல்)”

என்பதனால் கூறப்படுகின்றன. இதன் பொருள், நுண்ணிய உழிஞைக் கொடியணிந்த வெல்கின்ற போரினையுடைய அறுகை யென்பான் நெருங்கப்போந்து துணைசெய்ய வியலாத சேணிடத்

திருந்தானாயினும் அவனைத் தனக்கு நண்பனாவான் எனத் தழுவிக்கொண்டு, இடம் பெயர்ந்து சென்று ஒளித்திருந்து செய்தமாற்ற வொண்ணாத வருத்தத்தின் பொருட்டு மோகூர் மன்னனுடைய அரண்களை யழித்தற்றொழிலைத் தானே மேற் கொண்டு, தெய்வமருள் உற்றான்போல் வீரமருள் உற்று அவன் (மோகூர் மன்னன்) வெற்றி முரசைக் கைப்பற்றி, அவன் கூறிய வஞ்சினத்தைப் பொய்ப்பித்து, அவனையும் பணிவித்து, காவல் மரமாகிய வேம்பினையும் அடியோடே தடிந்து, முரசு செய்தற் பொருட்டுத் துண்டஞ் செய்து யானைகள் பல பூட்டி வண்டியிற் செலுத்திய ஆடு நடையண்ணல் என்பது.

இனி, இப்பத்தின் ஐந்தாம்பாட்டு இவன்கடல்பிறக் கோட்டிய செய்தியை வியந்து, இத்தகைய அரியசெயலைச் செய்தமன்னர், நினக்கு முன்னிருந்த மன்னருள் ஒருவருமிலர், பின்னும் ஒருவருமிலர் என்பதை, "எழுமுடி மார்பின் எய்திய சேரல்! முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசினோர் மன்னர் இனியாருளரோ! நின்முன்னுமில்லை" என்று கூறுகின்றது. இது, "பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணி" என்று தொடங்கி, "எழுமுடி மார்பின் எய்திய சேரல்" என்பது வரையில் ஒருபகுதியாகவும், "குண்டுகண் அகழிய மதில்பல கடந்து" என்பது முதல், "அனைய பண்பிற் றானைமன்னர்," என்பதுவரையில் ஒருபகுதியாகவும், எஞ்சியது கடல்பிறக் கோட்டிய வனப்பினைக் கூறும் பகுதியாகவு மமைந்துளது.

இவற்றுள், முதற்பகுதி,

"பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணிப்
புற்றடங் கரவின் ஒடுங்கிய அம்பின்
நொசிவுடை வில்லின் நொசியா நெஞ்சிற்
களி(று)எறிந்து முரிந்த கதுவாய் எஃகின்
விழுமியோர் துவன்றிய அகன்கண் ணாட்பின்
எழுமுடி மார்பின் எய்திய சேரல்" என வருகின்றது.

இதன்பொருள், பொன்னாற்செய்த பூவாற்றொடுத்த தும்பை மாலையும், புள்ளிகள்பொருந்திய தூணியும், புற்றின்கண்

அடங்கியிருக்கும் பாம்புபோல் ஒடுங்கியுள்ள அம்புகளும், அவற்றைத் தொடுக்குந்தோறும் துவளுதலையுடைய வில்லும் அவ்வாறு துவளுதலில்லாத நெஞ்சமும், களிறுகளைத் தாக்குதலால் முரிந்து வடுப்பட்ட வேலுமுடைய சிறிய வீரர் நெருங்கிய அகன்ற போர்க்களத்தைப்பெற்ற, "ஏழரசரைவென்று அவர்களுடைய எழுமுடியாமலும் செய்ததோர் ஆரத்தைபணிந்த மார்பினையுடைய" சேரமானே என்பது.

இரண்டாவது பகுதி, இச்செங்குட்டுவற்கு முன்னிருந்த மன்னரது சிறப்பினை விளக்குகின்றது. அது,

"குண்டுகண் அகழிய மதில்பல கடந்து
பண்டும் பண்டும்தாம் உள்ளழித் துண்ட
நாடுகெழு தாயத்து நனந்தலை யருப்பத்துக்
கதவம் காக்கும் கணையெழு வன்ன
நிலம்பெறு திணிதோள் உயர வோச்சிப்
பிணம்பிறங்(கு) அழுவத்துத் துணங்கை யாடிச்
சோறு வே(று) என்னா ஊன்றுவை யடிசில்
ஓடாப் பீடர் உள்வழி இறுத்து
முள்ளிடு(பு) அறியா ஏணித் தெவ்வர்
சிலைவிசை யடக்கிய மூரி வெண்டோல்
அனைய பண்பிற் றானை மன்னர்
இனியார் உளரோநின் முன்னும் இல்லை." என்பது.

இதற்குப் பொருள், ஆழ்ந்த இடம் பெற்ற அகழி சூழ்ந்த மதில் பல கடந்து முன்னும் முன்னும் தாம் உள்புகுந்து அழித்துக் கொள்ளையாடிய நாடு பொருந்திய உரிமையுற்ற அரண்களின் நடுவில் திண்ணிய கதவுகளைத் திறக்காவகையில் தடுக்கும் கணைய மரமாகிய எழுப் போன்ற, மாற்றார் நிலங்களைக் கவரும் வலிய தோளை உயரச் செலுத்திப் பிணம் நிறைந்த களத்திலே துணங்கைக் கூத்தாடி, ஊனைத் துவைத்துச் சமைத்த சோறு வேறு என்றும் கருதாது எற்கும், புறங் கொடுத்து ஓடாத பெருமைபெற்ற வீரர் உள்ளடங்கிய இடங்களை முற்றியிருந்து முள்ளிட்டிருத்தலால் ஏறப்படாத ஏணியினையுடைய பகைவர்

களின் சிலையின் வேகத்தை யடக்கிய வலிய வெண்மையான தோற் கேடகம் போலும் பண்புகொண்ட தானையையுடைய மன்னர் நினக்கு முன்னுமில்லையாகலின், இனியாவர் உளரா வரோ என்பதாம். "தோல் அனைய பண் பென்றது, தான் அம்புபடில் தளராது பிறர்க்கு அரணமாகும் தோற்கடகு போன்ற பண்பு என்றவாறு."

இனி, கடல் பிறக் கோட்டிய வனப்பு,

"மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி யிமைப்பின்வேல் இடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்தி சினோரே"

என வருகின்றது. இதன் பொருள், முகில் முகத்தலாலும், யாறுகளின் வழியே நீர் மிகுதலாலும் முறையே குறைதலும் நிறைதலும் செய்யாது விலங்குகின்ற காற்றால் அலைக்கப்படும் முழங்கும் அலைகளையுடைய குளிர்ந்த கடலின்கட்புகுந்து அசைகின்ற பெரிய சூல் நிறைந்த மேகத்தின் மணிபோல் ஒளி விடும் மின்னலை ஒத்த வேலைச் செலுத்தி, கடற்கண் ஒரு வினை செய்தல் அரிதென்னும் சொல்லை மறுத்து அதனைச் செய்து முடித்தோர், என்பதாம். இதன்கண், "மணியிமைப்புப் போலும் மின்னுக்கு மணியிமைப்பு என்பது பெயராயிற்று."

இனி, ஆடும்பாட்டு மகளிர் பாட, அவர்க்குச் செங்குட்டு வன் இனியகள் வழங்குவதும், கடலோட்டியதும் கூறுகின்றது. இவற்றுள்,

"இழையர் குழையர் நறுந்தண் மாலையர்
சுடர்நிமிர் அவிர் தொடி செறித்த முன்கைத்
திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்
வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட
இனிதுபுறந் தந்தவர்க்(கு) இன்மகிழ் சுரத்தலின்,
...."

வெல் புகழ்க் குட்டுவற் கண்டோர்
செல்குவ மென்ணர் பாடுபு பெயர்ந்தே"

எனவரும் இஃதவன் கள் வழங்குதலைக் காட்டுவது. இதன் பொருள், இழையும், குழையும், நறிய தண்ணிய மாலையும், சுடர் விட்டு விளங்கும் தொடியணிந்த முன்கையும், வலிய ஒளி பொருந்திய அழகிய மணிகிடந்து விளங்கு மார்பும், வண்டு மொய்த்த கூந்தலிவிட்ட முடியுமுடைய மகளிர் இசைமிக்க பேரியாழில் செவ்வழிப் பாலையென்னும் பண்ணையியக்கிப் பிறரைப் பணியுமுறைறமைத்தல்லாத உழிஞைத் திணைக்குரிய உழிஞைப்பண்ணிேைடு கூட்டிப்பாட, அவர்களையினிது ஏற்றுப் பேணி, இனிய கள்ளினை அவர்கட்கு வழங்குதலால், அவனைக் காண்போர் பாடிப்பெயர்ந்து செல்குவமென்று சொல்லார். எனவே, அவனிடத்தேயிருக்க விரும்புவார் என்பதாம். அவன் கடல்பிறக் கோட்டியசெய்தி, இப்பாட்டினுள்,

"சுரம்பல கடவும் கரைவாய்ப் பருதி
ஊர்பாட் டெண்ணில் பைந்தலை துமியப்
பல்செருக் கடந்த கொல்களிற் றியானைக்
கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்(டு)
உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்"

என்ற அடிகளால் கூறப்பெறுகின்றது. இவற்றின்பொருள், போரிடங்கள் பலவற்றினும் கடந்துசெல்லும் குருதிக்கரை படிந்த உருளைகளையுடைய தேர்ஊர்கின்ற பாட்டையில், யானைப் போர்க்கு அஞ்சி ஒளித்த மறவர்களின் பசியதலைகள் ஆழியின் கீழ்ப்பட்டு நசுங்க, பலவாகிய போர்களில்வென்ற பகைகொல் லும்யானைகளையும், சங்குமுழங்கும் கடல் கலங்குமாறு வேலைச் செலுத்திக்கரையையுடைக்கும் அலைமிக்க அதனைப் பிறக்கிடச் செய்த வெல்கின்ற போராற்பெறும் புகழையுமுடைய குட்டு வன் என்பது.

இனி, ஏழாம்பாட்டின்கண் நகரின்சிறப்பும் குட்டுவன் இயல்பும் கூறப்படுகின்றன. இவற்றுள், "அட்டானுனே

குட்டுவன், அடுதொறும்— பெற்றனரே பரிசிலர்களிறே, ...
தொன்னகர் வரைப்பின்அவன் உரை யானவே" என்பன குட்டுவன் இயல்பும் புகழும் விளக்குவனவாம். இவ்வடிகளின் பொருள், செங்குட்டுவன் போரில் அடுந்தோறும், போரைச் செய்து அமைந்திரான் ; அவன்புகழ் பாடும்பரிசிலர் களிறுகளைப் பெற்றும் அவற்றோடுஅமையார் ; அவனுடைய பழையநக ரிடங்களில் அவன்புகழ்கள் அமையாவாய்யாண்டும் பரவும்" என்பதாம்.

நகர்ச் சிறப்பு,

"வரைமிசை யிழிதரும் அருவியின் மாடத்து
வளிமுனை யவிர்வரும் கொடிநுடங்கு மறுகிற்
சொரிசுரை கவரு நெய் வழிபு உராவிற்
பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல
நன்னுதல் விறலிய ராடும்
தொன்னகர்." எனவருகின்றது.

இதன் பொருள், மலையினின்றிழியும் அருவிகளைப் போல, மாடங்களில் காற்றின் முன் விளங்கும் கொடிகள் அசைகின்ற தெருக்களில் நெய் சொரியும் உட்சந்து பொருந்திய திரிக்குழாய், தான் ஏற்றுக்கொண்ட நெய் வழிந்து திரியில் உலவுதலால், கால் விளக்குகளில் பருத்த சுடர்விட்டு எரிய, அவற்றின் ஒளி யில் தம் ஆடல் பாடல்களுக் கேற்ப நூலுட் சொல்லப்பட்ட அழகையுமுடைய நன்னுதல் பெற்ற விறலியர் ஆடும் பழைமை யான நகர் என்பதாம்.

இனி, இதன் எட்டாம்பாட்டுச் செங்குட்டுவனை வாழ்த் துதலே பொருளாக அமைந்துள்ளது. இவ்வாழ்த்தினைக் கூறுவார், முதற்கண், இவன் கடலொடுபொருது, ஆண்டுப் பெற்ற பொருளைப் பாணர் விறலியர்க்கு ஈதலும், பின்னர், பெருந்துறையின் சிறப்பும்கூறுகின்றார். இதன் கருக்கொண்ட பொருள், கடலொடுஉழந்த பனித்துறைப்பரதவ ! பல்பொறி மார்ப ! நின்பெயர் காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவாகியகாலம் நின்றுநிலவுமாக என்பது.

இதன் முதற்பகுதி,

“பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டிக்
கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ !*
ஆண்டுநீர்ப் பெற்ற தாரம் ஈண்டிவர்
கொள்ளாப் பாடற்(கு) எளிதின் ஈயும்
கல்லா வாய்மையன் இவனெனத் தத்தம்
கைவல் இளையர் நேர்கை நிரைப்ப
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
முனைசுடு கனையெரி எரித்தலிற் பெரிதும்
இதழ்கவின் அழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்ப !† நின் பெயர்வா ழியரோ,”

என்பது. பசிய பொன்னாற் செய்யப்பட்ட தாமரையைப் பாணர்க்குச்சூட்டி, ஒள்ளிய நுதலினையுடைய விறலியர்க்கு மாலைகள் அணிந்து, அழியாத பலவாகிய புகழ்நிறுவி, நீரின் கட்புகுந்து கடலொடு பொருதுநின்ற குளிர்ந்த துறையினையுடைய பரதவனே ! “கடலுட் போர்செய்து அரிதிற்பெற்ற பொருளை எளிதாக மனங்கொள்ளாப் பாடலையுடைய தரம் போதாதார்க்குக் கொடுக்கும் கல்லாததன்மையை உண்மையாக வுடையவன் இவன் என இழித்துக் கூறற்கேற்பக் கைவல் இளையர் அடைவேதத்தம் கையைச் சுட்டி நிரைக்கும்படி இரவலரிடத்து வணக்கத்தைப் புலப்படுக்கும் மென்மையும், மானத்தால் வணங்காத ஆண்மையுமுடையனுய்ப் பகைவர்முனை யிடங்களை மிக்க எரிகொளுத்துதலால் இதழ்கள் பெரிதும்வாடி

* “பரதவ என்றதனுற்சொல்லியது, அக்கடலின் உழத்தற்றொழில் ஒப்புமைபற்றி அக்கடற்றுறைவாழும் நுளையர்க்குப் பெயராகிய பரதவன் என்னும் பெயரான் இழித்துக் கூறினுன்போலக் குறிப்பான் உயர்த்து வென்றி கூறினுகைக் கொள்க”—ப. உரை.

† “அம்பகட்டு மார்பின், செம்பொறி” என்ற முருகாற்றுப்படை யடியின் உரையைக் காண்க.

அழகிழந்த மாலையோடு பூசியசாந்தும் புலர்ந்துள்ள உத்தம இலக்கணமென்ற பலவாகிய வரிகள் மூன்றும்பொருந்திய மார்பினையுடையவனே! நின்பெயர் நின்று நிலவுமாக என்பது. இதன் பொருளாகும்.

இதன் பிற்பகுதி,

“ நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவின்
பொழில்வதி வேனிற் பேர்எழில் வாழ்க்கை
மேவரு சுற்ற மோ(டு) உண்டினிது நுகரும்
தீம்புன லாய மாடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே”

என்பது. இதன்பொருள் நினக்குரிய மலைக்கண்ணே பிறந்து, நின்னுடைய கடலைச்சென்று சேரும் யாறுகளிலே புதிதாக வருகின்ற இனிய புதுநீர் விழாக்காலத்து, வேனில் வெப்பத்தால் மனையில்வைகாது பொழில்களிலேவதியும் பெரிய செல்வ அழகையுடைய இல்வாழ்க்கையை விரும்பும் சுற்றத்தாரோடு அச்செல்வப்பயன்களெல்லாம் நுகர்ந்து மகிழ்கூரும் புனலாடு மாயத்தார் ஆடலயரும் காஞ்சிமரங்கள் நின்றபெரிய துறைக்கண்ணுள்ள மணலினும் பலவாகியகாலம் நின்பெயர் வாழியரோ என்பது.

(தொடரும்.)

உ

கோவிந்த புத்தூரிலுள்ள

திருவிசயமங்கைக் கல்வெட்டுக்கள்.

திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

கோவிந்தபுத்தூர் என்பது திருச்சிராப்பள்ளிசில்லா உடையார்பாளையந் தாலூகாவிலுள்ள ஒரு சிவத்தலமாகும். இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்துமைல் தூரத்திலுள்ள திருப்புறம்பயத்திற்கு வடமேற்கே மூன்றுமைல் தூரத்தில் கொள்ளிடப்பேராற்றின் வடகரையில் இருக்கின்றது. இவ்வூரிலுள்ள சிவாலயம் திருவிசயமங்கை என்னும் பெயருடையதாகும். இது சைவசமயாசாரியராகிய திருஞான சம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது; பாண்டுவின் மகனாகிய பார்த்தனால் பூசிக்கப்பெற்றமையின் இஃது இப்பெயரெய்திற்று என்பது 'பாண்டுவின்மகன் பார்த்தன் பணிசெய்து—வேண்டுநல் வரங்கொள் விசைய மங்கை—ஆண்ட வன்னடியேனினைந் தாசையாற்-காண்ட லேகருத் தாகி யிருப்பனே' என்னும் ஆளுடைய அரசினது திருப்பாடலால் நன்குபுலப்படுகின்றது. கோவந்த புத்தூர் என்பது இக்காலத்தில் கோவிந்தபுத்தூர் என்று வழங்குகின்றது. அத்தலத்தில் கோ வந்து பூசித்த காரணம் பற்றி அஃது அப்பெயர் எய்தியதுபோலும். இவ்வரலாறு அக்கோயிலின் திருச்சுற்றுமாளிகையில் அமைக்கப்பெற்றுள்ள சுதைப்படிமங்களால் விளங்குகின்றது. அன்றியும், கொள்ளிடக்கரைக் கோவந்த புத்தூரில்—வெள்விடைக் கருள்செய் விசய மங்கை—உள்ளிடத்துறை கின்ற வுருத்திரன்—கிள்ளிடத்தலை யற்றதயனுக்கே' என்னும் தேவாரப்பாடலும் ஈண்டு ஆராய்தற்குரியதாகும். கோவந்தபுத்தூரும் அவ்வூரிலுள்ள சிவாலயமாகிய திரு விசயமங்கையும் வெவ்வேறு தலங்கள் என்றும்

அவற்றுள் கோவந்தபுத்தூர் வைப்புத்தலம் என்றும் திருவிசய மங்கை பாடல் பெற்றதலம் என்றும் கருதிவந்தனர். கோவந்த புத்தூரில்எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கும்பொருட்டு ஒரு சிவராத்திரியில் அவ்வூர்க்குச் சென்றிருந்தேன். அப்போது அங்குள்ள திருக்கோயில் பல கல்வெட்டுக்கள் நிறைந்தபழமை வாய்ந்த கற்றளியாகக் காணப்பட்டது. அக்கல்வெட்டுக்களுள் இரண்டைப் படித்துப் பார்த்தபோது அத்திருக்கோயில் விசய மங்கலம், விசயமங்கை என்ற பெயருடையதென்பது இனிது வெளியாயிற்று. எனவே கோவந்தபுத்தூரிலுள்ள அத்திருக் கோயில் திருவிசயமங்கை என்னும் பெயருடையதென்பது நன்குணரப்பட்டது. பிறகு அத்தலத்திற்குரிய தேவாரப் பதிகங்களையும் பெரிய புராணத்தையும் ஆராய்ந்தபோது கல் வெட்டுக்கள் உணர்த்திய அவ்வரியசெய்தி அவற்றால் பெரிதும் உறுதியெய்திற்று. பின்னர் அத்திருக்கோயிலிலுள்ள கல் வெட்டுக்களை எழுதிவந்து வெளியிடவேண்டும் என்ற விருப்பத் துடன் காலங் கருதிக்கொண்டிருந்தேன். சென்ற கோடை விடுமுறையில் சில நண்பர்களுடன் அவ்வூர்க்குச்சென்று ஒரு நாள்முழுதும் தங்கிச் சில கல்வெட்டுக்களை எழுதிவந்தேன். வரலாற்று ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் என்று கருதி அவற்றை இதுபோது வெளியிடலானேன்.

I

இடம் :—திருவிமானத்தின் மேற்புறம்.

காலம் :—மதுராந்தகசோழனது 13ஆம் ஆண்டு.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரிபந்மற்கு யாண்டு ௰௩வது வடகரை பிர்மதேயம் பெ (2) ரிய ஸ்ரீவானவன் மாதேவிச் சதுர் வேதிமங்கலத்து ஸ்ரீவிஜயமங்கலதே (3) வற்கு இஸ்ரீவிமானம் கல்லால் எழுந்தருளுவிச்சேன் ஸ்ரீஉத்தமசோழதேவர் பெருந் (4) திறத்து குவளாலம் உடையான் அம்பலவன் பழுவூர் நக்க னைவிக்கிரமசோழ (5) ஸ்ரீமாராயனேன் இஸ்ரீவிஜயமங்கலத்து மஹாதேவற்கு.

II

இடம் :—திருவிமானத்தின் மேற்புறம்.

காலம் :—மதுராந்தகசோழனது 13ஆம் ஆண்டு.

(1) கோப்பரகேசரிவற்மற்கு யாண்டு ௰௩வது இத்திருக் கற்றளி எடுப்பித் (2) த குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனான விக்கிரமசோழமாரா (3) யர் அகமுடையாள் அபராதி தன்செய்யவாய்மணி சந்திராதித்தவல் வைத்த நொந் (4) தா விளக்கு ஒன்றுக்கு நிசத(ம்) உழக்கு நெய்யாக வைத்த ஆடு தொண்ணூற்று ஆறு. இவை சாவா மூவா-பன்மாகேசுரரட்சை.

III

இடம் :—திருவிமானத்தின் மேற்புறம்.

காலம் :—மதுராந்தக சோழனது 13ஆம் ஆண்டு.

(1) கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு ௰௩வது இத்திருக் கற்றளி எடுப் (2) பித்த குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கன் ஆன விக்கிரமசோழ மாராயர் (3) அகமுடை யாள் சிங்கபன்மன் கஞ்சி அக்கன்வைத்த நொந்தா விளக்கு ஒன்றுக்கு நிசதமுழக் (4) குநெய் (5) யெரிக்கவை (6) த்தசாவா மூ(7)வாப்பேராடு (8) தொண் (9) ணூற்றுஆ (10) று இவை ப (11) ன்மாகேசுர (12) ரக்ஷை.

IV

இடம் :—திருவிமானத்தின் தென்புறம்.

காலம் :—மதுராந்தக சோழனது 10ஆம் ஆண்டு.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரிவர்மற்கு யாண்டு ௰வது வடகரை (2) பிர்மதேயம் பெரிய ஸ்ரீவானவன் மகாதேவிச் சதுர் வேதிமங் (3) கலத்து ஸ்ரீவிஜயமங்கலத்து மஹாதேவற்கு இத் திரு (4) க்கற்றளிசெய்வித்த அம்பலவன் பழுவூரனான ஸ்ரீவிக்

கிர (5) மசோழமாராயன் சந்திராதித்தவல் நந்தாவிளக்கு ஒன் (6) றினுக்கு வைத்த ஆடு தொண்ணூற்ருறு அண்டாட் (7) டு மழவர் ஸ்ரீவிஜயமங்கலத்து மகாதேவர்க்கும் (8) சந்திராதித்த வல்நொந்தா விளக்கிரண்டுக்குக் கொடுத்த பலக்கிரண்டு. இவை பன்மாகேசுரரட்சை.

V

இடம் :—திருவிமானத்தின் தென்புறம்.

காலம் :—மதுராந்தகசோழனது 10ஆம் ஆண்டு.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீகோப்பரகேசரி பன்மற்கு யாண்டு வெது வடகரைப் பிர்மதேயம் பெரிய வானவன் மகாதேவிச் சதுர் (2) வேதிமங்கலத்து ஸ்ரீவிஜயமங்கலத்து மகாதேவற்கு சந்திராதித்தவல் நந்தாவிளக்குக்கு அடிகள்பழுவே (3) ட்டரையர் மறவன் கண்டனுர் கன்மி குன்றக் கூற்றத்து ஆரணி நல்லூருடைய மடைப்பெருமை சுவாமியான குன்ற நாட்டு (4) கண்டப்பெருந் தீவன் வைத்த ஆடு தொண்ணுறும் பன்மாகேசுரரட்சை.

VI

இடம் :—திருவிமானத்தின் வடபுறமும் மேற்புறமும்.

காலம் :—மதுராந்தகசோழனது 14ஆம் ஆண்டு.

(1) கோப்பரகேசரிவர்மற்கு யாண்டு செவது உடையா (2)ர் பெருந்திறத்து குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் (3) நக்கனை விக்கிரமசோழ மஹாராஜநேன் வடகரை பிர்மதேய (4) ம்பெரிய ஸ்ரீவானவன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீவிஜயமங்கலத் (5) துமஹாதேவர் ஸ்ரீவிமானம் கல்லால் எழுந்தருளுவித்து இத்தேவர்க்குத் (6) திருவமுதுக்கும் திரு விளக்குக்கும் ஸ்ரீபலிக்கும் திருமெய்ப் பூச்சுக்கும் திருப்பூசை (7) க்கும் திருநன்தவாநபுறத்துக்கும் திருவிழாவுக்கும் சிரவணங் களுக்கும் மற்றும் (8) இத்தேவற்குவேண்டும் ஆராதினைகள் எப்பேர்பட்டனவைச் சுக்கு (9) மாக னுன்கொடுத்த ஊராவது இப்பெரிய ஸ்ரீவாநவன் மஹாதேவி சதுர்வேதிம (10) ங்கலத்து

வடபிடாகை நெடுவாயிலும் (11) இது உட்படும் ஊர்த்தாமரை னல் (12) ஊரும் திருச்சேநிவலமும் மாக்குலக்கு (13) றிச்சியும் உள்பட்ட இந்நெடுவாயில் வளை (14) வில் சுற்றுமுற்றும் இவ்வூர் நிலமும் புன் (15) செயும் மென்செயும் மேநோக்கின மரமும் கீழ் (16) னோக்கின கிணறும் குளமும் கொட்டகமும் புற்றுந் தெற்றியும் ம (17) ற்றும் உடும்போடி ஆமை தவழ் நிலத்து எப் பேர்பட்ட (18) வும் இவ்வூர் இலைக்கலம் தறிப்புடைவையும் கண் (19) ணாலக்காணமும் கொற்பாட்டமும் உலையும் உலைப் பாட்டமும் (20) உள்பட இவ்வூர் வளையில் சுற்றுமுற்றும் இப் பெரிய ஸ்ரீவானவன் (21) மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிப் பெருமக்கள் பக்கல் விலை (22) கொண்டு உடையேனா இம்மகாசபையார்க்கே எழுநூறு காசுகுடு (23) த்து இறை இழிச்சி இப்பரிசு இறையிலியாக நான் உடையேனாம் இரு (24) ந்த இந்நெடுவாயில் முற்றும் இஸ்ரீவிஜயமங்கலத்து மகாதேவர் க்குமு (25) ன் சாட்டப்பட்ட எப்பேர்பட்ட திருவாராதினை சளுக்கும் போகமாகக் கொடுத்தேன் (26) குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனான விக்கிரமசோழ மஹா (27) ராஜனேன். இவை பன்மாகேசுரரட்சை-அறம்மறவற்க அறமல்லது துணையில்லை-(28) இவர் சொல்ல எழுதினேன் இவ்வூர் மகா....... ந்நி...........வானவன் மாதேவி பெருங்கா (29) விதியேன் இவை என்னெழுத்து.

(1) இந்நெடுவாயிலும் நெடுவாயில் சுற்றின படாகை (2) களும் இத்தேவற்கு இறுக்கக்கடவ இறையிலி கோயிற்கல் ஊர்கால் பழுவூர் நக்கனால் (3) திருமுற்றத்து அளக்கக் கடவ நெல்லு...........(4) அட்டக் கடவநெல்லு ஆயிரக்கலம் முன் துளைக்கழஞ்சாகவைத்த பொன்காசு நிறைகல்லால் (5) பொன் நூற்றுக்கழஞ்சும் தறிப்புடைவை ஒன்று கால்பொன் பெறுவன புடைவை பன்னிரண்டும் (6) நெய் எண்ணெய் முக்கலம் கொல்லர்உலைப்பாட்டம் இரும்பு ஆயிரப்பலம் நெடுவாயில் புறத்திற்கு நிபந்தஞ்செய்தபடி சிவயோகிப் பிராமணர் ஐம்பதின்மரும் ஐம்பதின்மருக்கு ஒருவனுக்கு (7) அரிசி யிருநாழியாக இரு நாழிக்குநெல்லு ஐந்நாழியாக ஐம்பதின்மருக்குநெல்லு இரு

கலனே எழுகுறுணி இருநாழி (8) யுமாக நெய்முந்நாழி ஆழாக்குக்கு நெய்நாழிக்கு நெல்லு தூணியாக நெய்முந்நாழி ஆழாக்குக்கு நிசதம் நெல்லு..........(9) நாழியும் கறிக்கு நெல்லு தூணியும் புளிங்கறியும் அடுவார்க்குநெல்லு குறுணியும் அட்டி- (எஞ்சியவை உதிர்ந்துபோய்ப் படிக்கமுடியாத நிலையிலுள்ளன).

VII

இடம்:—மகாமண்டபத்தின் தென்புறம்.

காலம்:—மூன்றும் இராசராசசோழனது 32ஆம் ஆண்டு.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ௩௰௨வது (2) கன்னிஞாயிற்று, பூர்வபட்சத்து சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமையும்பெற்ற உத்திரட்டாதிநாள் (3) வடகரை விக்கிரம சோழவளநாட்டு இன்னம்பர் நாட்டுஉடையார் திருவிசயமங்கை யுடைய நாய (4) னர் திருமடைவளாகத்து திருத்தோண்டத் தோகையன் திருமடத்து ஸ்தானபதி சுப்பிர மண்ணிய சிவனேன் இந் (5) நாயனர்க்கு திருப்பள்ளித் தாமம் ஆக்குவார்க்கு ஜீவனத்துக்கு உடலாகத் திருநந்தவனப்புரமாகக் கொண்டுவிட்ட நிலமாவது (6) ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்து கோதண்டராம வதிக்கு மேற்கு வானவன் மாதேவி வாய்க்கா (7) லுக்கு வடக்கு ஆறுங்கண்ணாற்று முதற் சதுரநிலம் (8) மாவின் வடக்கடைய நிலம் நான்மாவரையில் (9) மேற்கடைய நிலம் இரண்டுமாக்காணியில் கீழ்க்கடை நிலம்....... (10) அரைமா நீங்க இதன் வடக்கு நான்கிளி நல்லூர் கிழவன் தீபத்தரையர்பக்கல் (11) விலை நாயன் வாழவந்த நாயன் கொண்டு உடையேனாய் என்னுதாய் இருந்த வெட்டுப்பாழ் நிலம் காணியும் சந்திராதித்தவரை...........(12) திருநந்தவனம் ஆக்குவார்க்கு ஜீவனசேஷமாக விட்டேன் உடையார் திருவிசயமங்கை உடைய நாய (13) னர்க்குத் திருத்தொண்டத் தொகையன் திருமடத்து ஸ்தானபதி சுப்பிரமணிய சிவனேன் (14) இவை என்னெழுத்து—இவை பன்மாகேசுரரட்சை.

சில குறிப்புக்கள்.

இவ்வேழு கல்வெட்டுக்களுள் முதல் ஆறு மதுராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டுக்களாகும். இம் மதுராந்தக சோழன் ஒன்பதாம் திருமுறையுள் 'மின்னுருருவ மேல்விளங்க' என்று தொடங்கும் கோயிற்பதிகம் பாடியருளிய முதற்கண்ட ராதித்த சோழ தேவரது அருமைப் புதல்வன்; முதல் இராச ராசசோழனது சிறிய தகப்பன்; கி. பி. 970-ஆம் ஆண்டு பட்ட மெய்தி கி. பி. 985-வரை நம்சோழமண்டலத்தை ஆட்சி புரிந்தவன். இவ்வேந்தனுக்கு உத்தமசோழன் என்ற வேறு பெயரும் உண்டு. அன்றியும், இவனுக்கு விக்கிரமசோழன் என்ற மற்றொரு பெயரும் இருந்திருத்தல்வேண்டும் என்பது இப்போது வெளியிடப்பெற்றுள்ள திருவிசய மங்கைக் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. இவ்வேந்தனது ஆட்சியின் பத்தாம் ஆண்டாகிய கி. பி. 980க்கு முன்னரே, கோவந்தபுத்தூரிலுள்ள திருவிசய மங்கை என்னுந் திருக்கோயில் கற்றளியாக அமைக்கப் பெற்றிருத்தல்வேண்டும் என்பதை நான்காம் கல்வெட்டு உணர்த்துகின்றது. எனவே, இது முதலாம் இராச ராசசோழனால் தஞ்சைமா நகரின்கண் எடுப்பிக்கப்பெற்ற 'இராசராசேச்சுரம்' என்னும் ஆலயத்தினும் பழமை வாய்ந்த கற்றளியாகும். மதுராந்தகசோழன் காலத்துக்கோயிலமைப்பு எங்ஙனம் இருந்தது என்று ஆராயப்புகுவார்க்கு இக்கற்றளி பெரிதும் பயன்படும். இதனை எடுப்பித்தவன் குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கன் என்பான். இவன் மதுராந்தக சோழனது பெருந்திறத்து அதிகாரிகளுள் ஒருவன்; இவ்வேந்தனால் கொடுக்கப்பெற்ற 'விக்கிரம சோழமாராயன்' என்னும் பட்டம் உடையவன். 'மாராயம்பெற்ற நெடுமொழி' என்னும் வஞ்சித்திணைக்குரிய துறை ஒன்றால் அரசர்கள் தம் அதிகாரிகளுள் தக்கோர்க்கு இங்ஙனம் பட்டம்அளித்துப் பாராட்டுவது பழைய வழக்கமென்பது அறியப்படுகின்றது. இனி, இவ்விக்கிரமசோழமாராயனது சிவபத்தியின் மாண்புபெரிதும் போற்றத்தக்கது. இத்தலைவன் திருவிசய மங்கையைக் கற்றளியாக

எடுப்பித்ததும் இத்திருக்கோயிற்கு ஆண்டொன்றிற்கு ஆயிரக் கலநெல் வருவாயுள்ள நெடுவாயில் என்னும் ஊரை நிபந்தமாக விட்டு அதனை இறையிலியாக்கியதும் நூறுகழஞ்சு பொன் அளித்ததும் பிறவும் இவனது சிவபத்தியின் முதிர்ச்சியை நன்கு விளக்குதல் காண்க. இவனைப்போலவே இவனது மனைவிமார்களும் சிவபத்தியுடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பது இரண்டாவது கல்வெட்டினாலும் மூன்றாவது கல்வெட்டினாலும் புலப்படுகின்றது. பிறசெய்திகளை இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்துணர்க.

ஆழ்ந்த நோக்கம் யாண்டையது!

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், கரந்தை.

திருவாளர் P. S. சுப்பிரமணிய சாத்திரியாரவர்கள் M.A. Ph. D. என்பார் இயற்றிய தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு என்னும் நூலின்கண், கிளவியாக்கத்துச் 'செப்பினும் வினாவினும்...............' என்ற பதினாறும் சூத்திர அடிக்குறிப்பாக,

"தெய்வச்சிலையார் உரைப்புத்தகத்தின் அடிக்குறிப்பில் தெய்வச்சிலையார் இச்சூத்திரத்திற்குக் கூறியஉரை 'மற்றையோர் உரைகளின் முற்றும் வேறுபட்டது' என்று காணப்படுகின்றது. ஆழ்ந்து நோக்கின் அவர் உரை ஏனையோர் உரையினின்றும் வேறுபட்டதன்று. ஆனல் இம்மகள்கண் நல்லவோ இக்கயல் நல்லவோ என்ற உதாரணத்தை இச்சூத்திரத்தில் உரையாசிரியர் கொண்டனர்; அவர் கொண்டிலர்." என்பது காணப்படுகின்றது.

குறிப்புரையாளர் இவ்வடிக்குறிப்பில் ஆழ்ந்துநோக்கின்........ வேறுபட்டதன்று—என்று கூறி, ஆழ்ந்து நோக்கிச் செல்லும் தமது ஆற்றலினையும், தெய்வச்சிலையார் உரையில் அவ்வடிக்குறிப்பெழுதியவர்க்கு அவ்வாற்றலின்மையையும் குறிப்பாராயினர். ஒருவர், தமது பெருமையைக் குறித்துத் தாமே

எத்துணையும் புகழ்ந்துகொள்வதில் யார்க்கும் ஏதும் தடையில்லை; பிறரை இங்ஙனம் குறித்திகழும் புன்மையுரை தவிராமை, குறிப்புரையாளரைப்போன்ற தக்கோர் நூற்கு உரியதாகாதெனலை யான் முதற்கண் குறித்துச் செல்லவேண்டியவனுகின்றேன்.

இது நிற்க. ஒரு பெரிய நூலின் அரிய உரைகளையெல்லாம் ஆழ்ந்து நோக்கிக் குறிப்புரை வரைந்திருக்கும் இவர், மேற்சுட்டப்பெற்ற தெய்-உரை அடிக்குறிப்பாகிய ஒரு சிறு சொற்றொடரின் கருத்தினை சிறிதும் நோக்காமலே மேற்கூறியாங்கு அவ்வடிக் குறிப்பினை எழுதியிருக்கின்றார்! இவ்வுண்மையை அவ்விரு அடிக்குறிப்புக்களையும் கொண்டே முன்னர் விளக்கிக் காட்டுவேன். பின்னர் நூல், உரைமுதலியவைகளையும் காட்டி விளக்குவேன்.

தெய்—உரை அடிக்குறிப்பு, (கிளவி. 16-ஆம் சூத்திரம்)

'16, 17-ஆம் சூத்திர உரைகள் மற்றையோர் உரைகளினின்றும் முற்றும் வேறுபட்டவை' என்பதாகும்.

இங்கு, 'உரைகள் என்றது மூலபாடத்திற்கு உரைத்திருக்கும் பொருள்களைமட்டும் குறித்தது; எடுத்துக்காட்டு (உதாரணம்) முதலியவைகளையும் குறித்ததன்று. இவ்வாறு மூலத்தின் பொருளைமட்டும் உரை எனக் குறிக்கும் வழக்குண்மை, தமிழ்ப்பெரியார் உ. வே. சாமிநாதையரவர்கள் மயிலைநாதர் உரை முகவுரையில், 'மூலம், உரை, மேற்கோள் முதலிய' என்றும், 'உரையிற் சில வாக்கியங்களும் சில மேற்கோள்களும்' என்றும் எழுதுதலானே யறியப்படும். இதனைக் குறிப்புரையாளர் நோக்கிலர்; உரைமேற்கோள் முதலாய யாவற்றையும் இங்கு உரைகள் என்பது குறிப்பதாகப் பிறழ உணர்ந்திருக்கின்றனர். இவ்வுண்மையை அவர் அடிக்குறிப்பில் 'ஆனல்' என்று தொடங்கும் மூன்றாவது வாக்கியம் உணர்த்தும்.

மேலும் அவர் 16, 17-ஆம் சூத்திர உரைகள் என ஒருங்கி இணைத்துப் (1) பதினாறும் சூத்திரத்து (2) உரையின்பாற் (3) காட்டி

யிருப்பதன் கருத்து இன்னதென்றும் நோக்கிலர். இதனை இன்னும் சற்று விளக்கியுரைப்பேன். உரைகள் என்னும்பன்மை, இவ்விரு சூத்திரங்களுக்கும் உரைத்த—மூலப்பொருளாகிய—உரைப்பகுதி யிரண்டனையுமே குறிப்பதாகும். இதற்குச் சான்றுகள் (1) இச்சூத்திரங்களின் வேறுபாடுகளைத் தனித்தனி அவ்வச்சூத்திரத்தே எழுதாமல் '16, 17-ஆம் சூத்திர உரைகள்' என இணைத்திருப்பது (2) அதனைப் பதினாறும் சூத்திரத்தே காட்டியிருப்பது (3) அவ்வடிக் குறிப்பின் தோற்றுவாயாகிய (†) இவ்வடையாளத்தினை வேறெங்கும் காட்டாமல் மூலப் பொருளினிடத்தே காட்டியிருப்பது—ஆகிய இவைகளாம்.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் 16-ம் சூத்திரம் ஒருபொருளை நுதலியதாகவும், 17-ம் சூத்திரம் அதனின் முற்றும் வேறுபட்ட ஒருபொருளை நுதலியதாகவும் கொண்டு பொருள் கூறியிருக்கின்றனர். தெய்வச்சிலையாரோ, 16, 17ஆம் சூத்திரங்கள் இரண்டும் ஒருவகைப்பொருளையே நுதலியதாகக்கொண்டு தொடர்புறப் பொருள் கூறியிருக்கின் றனர். ஆகவே இவ்விருவகை உரைகளும் வெவ்வேறு நெறி யினவாயின. இது கருதியே '16, 17ஆம் சூத்திரஉரைகள் (என இணைத்துச்சுட்டிய அவை) மற்றையோர் (16, 17-ஆம் சூத்திர) உரைகளின்றும் முற்றும் வேறுபட்டவை' என்னும் அவ்வடிக் குறிப்பு எழுந்துளது. இக்கருத்தினை நோக்காத குறிப்புரை யாளர், உரைகள் என்ற பன்மை இங்கே மூலப்பொருள் எடுத் துக்காட்டு முதலாயவற்றையும் குறிப்பதாகக்கொண்டதால், தெய்வச்சிலையார் 16-ஆம் சூத்திரத்திற்குக் கூறிய உரை உதாரணங்கள் முதலியவை, ஏனையர் அச்சூத்திரத்திற்குக் கூறிய உரை உதாரணங்களில் முற்றும் வேறுபட்டவை; தெய் வச்சிலையார், 17ஆம் சூத்திரத்திற்குக் கூறிய உரை உதாரணங் கள் முதலியவை, ஏனையர் அச்சூத்திரத்திற்குக் கூறிய உரை உதாரணங்களின் முற்றும் வேறுபட்டவை—என அவ்வடிக் குறிப்புக் கூறுவதாகப் பிறழ உணர்ந்தார். உணர்ந்தார்க்குப் பதினாறும் சூத்திரத்தே 'முற்றும் வேறுபட்டது' என்பது பொருந்தாதெனல் தோன்றிற்று. தோன்றவே, மேற்கூறியவாறு

தமது அடிக்குறிப்பில் மறுப்பு எழுதியிருக்கின்றார். அங்ஙனம் எழுதுமிடத்தும் ஒரு தவறு செய்கின்றார். தாம் பிறழ உணர்ந்த அக்கருத்தினைத் தமதுகூற்று நெறியில் வைத்து மொழியாமல் படிமொழிதல் (Quotation) நெறியில் "[தெய்வச்சிலையார் இச் (16) சூத்திரத்திற்குக் கூறியஉரை] 'மற்றையோர் உரைகளி னின்றும் முற்றும் வேறுபட்டது' என்று காணப்படுகின்றது" என்று கூறியிருத்தல் காண்க. இது, படிமொழிதல் நெறிகடந்த தவறாகும். இவ்வுண்மையினை இவ்விரு அடிக்குறிப்புக்களினு முள்ள ஒருமை, பன்மைச் சொல்வேற்றுமை பொருள்வேற்றுமை களைக் கொண்டறியலாம்.

குறிப்புரையாளர் 17-ஆம் சூத்திரத்திற்கு இவ்விருவகை யுரைகாரரும் முற்றும் வேறுபட உரை உரைத்திருப்பதை எளிதே கண்டார். கண்டாரும், அங்கு நின்றுவது அவ்வேறு பாட்டின் தோற்றுவாய் 16-ஆம் சூத்திரத்திலே தொடங்கப் பெற்றுவிட்டதை நோக்கினாரல்லர்.

இனி, குறிப்புரையாளர் கருதியவாறு 16ஆம் சூத்திரத் தின் உரை உதாரணம் எல்லாம் கொண்டு, பிரித்து நோக்கினும், அங்கும் ◦ இவ்விருவகையுரைகளும் முற்றும் வேறுபட்டிருப் பது காணலாம். குறிப்புரையாளர் தமது அடிக் குறிப்பில், ஆழ்ந்து நோக்கின்.............................வேறுபட்டதன்று-என்று கூறுவதனாலே, பார்த்த அளவிலே அங்கு ஒரு வேறுபாடு புலப்படுவதுண்டு என்பது பெறப்பட்டது. அன்றியும் வேறு பட்டதன்று எனத் திட்டமாகக்கூறி முற்றுப் புள்ளியிட்ட அவரே, மீண்டும் ஆனால் என்று தொடங்கி, இவர் இவ்வுதா ரணத்தை இங்குக்கொண்டனர், அவர் கொண்டிலர்-என முன்னொடு பின் முரணவும், அவ்வேறுபாடு நன்கு விளங்கவும் கூறவேண்டிய ஓரின்றியமையாமை எய்தியிருப்பதால், அவ் வேறுபாடு கைநெகிழவிடற்குரிய எளிதொன்றன்றென்பதும் பெறப்படும்.

ஆனால், இப் பதினாறும் சூத்திரத்தில் தெய்வச்சிலையார் உரையும், ஏனையர் உரைகளும் முதல் சினை, வினாவிடை முதலாய பொருண்மைபற்றி ஏதோ சிறிது ஒத்துச் செல்லல் உண்மையே.

அதுகொண்டு இருசூத்திரங்களின் உரைகளையும் நோக்கிச் சொன்ன மேற்கூறிய தெய்-உரை அடிக் குறிப்பைப் பிழை எனல் பொருந்தாது. என்னை?

'தஞ்சை—ஆரூர் இரயிற்சாலையும், தஞ்சை—குடந்தை இரயிற்சாலையும் வெவ்வேறு திசையின' என்றார் ஒருவர். இச் சாலைகள் புறப்படும்போதே பிரிந்துவிடவில்லை; இரண்டொரு மைல் தூரம் ஒத்துச்சென்று பின்பு பிரிகின்றன. இவ்விரு சாலைகளின் முதல் நிலையங்கள் முறையே மாரியம்மன்கோவில், வடவாறு என்பனவாகும். இவ்விரு நிலையங்கள்வரையினுமே அச்சாலைகள் ஒத்து ஒரே திசையிற் சென்றில. இது கண்டார் ஒருவர், மேற்கூறியபடி இவ்விரு நிலையங்களுக்கும் இடைப் பட்ட சாலைப் பகுதிகள் ஓரளவு ஒத்துச் செல்லலைமட்டும் கொண்டு 'தஞ்சை-மாரியம்மன்கோயில் இரயிற்சாலையும் தஞ்சை வடவாறு இரயிற்சாலையும் வெவ்வேறு திசையின' என்று காணப்படுகின்றது. வெவ்வேறு திசையினஎனல் அவற்றைக் கண்டறியார் கூறியது எனின், அது பொருந்தும் வழக் காகுமா? இங்குக் காட்டிய படிமொழிதல் தான் பொருந்துவ தாகுமா? ஆகாதே. எனவே, 16ஆம் சூத்திர அளவில் இவ் விருவகை உரைகளும் ஏதோ சிறு ஒற்றுமை கொள்ளல் குறித்து, இருசூத்திர உரைகளையும் இணைத்தெழுதிய தெய்-அடிக் குறிப்பு, ஆழ்ந்து நோக்காமையின் எழுந்த பிழைக் குறிப்பு எனல் பொருந்தாமை காண்க.

இனி, இச் (16) சூத்திர உரைமுதலியவற்றிலும் இவ்விரு வகை யுரைகளிலுமுள்ள வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவேன்.

தொல்-சொல்-கிளவியாக்கம்—16, 17-ஆம் சூத்திரங்கள் :—

செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே. (16)

தகுதியும் வழக்கும் தழீயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே. (17)

இவ்விரு சூத்திரங்களுக்கும் தெய்வச்சிலையார் கூறிய உரை

முதலாயவற்றின் கருத்தினையும், ஏனையர் கருத்தினையும், சேர வைத்து விளக்கிக் காட்டுவேன். பொழிலன்பர்கள் ஆங்காங்குக் காணப்படும் வேற்றுமைகளை நோக்கிவருவார்களாக.

ஒருவன் மற்றொருவனை ஒருபொருள்பற்றி வினவுமிடத்தும் அதற்குப் பின்னோன் விடை கூறுமிடத்தும் நோக்கற்குரிய சிலவிதிகள் இங்குக் கூறப்படுகின்றன.

I

இரண்டு பொருள்களைச் சீர்தூக்கிக் காணுமிடத்து (Comparison) ஒன்றற்கு ஒன்று இனமாயுள்ளவற்றையே கொண்டு வினவுவான், 'இராமன் நல்லனோ முருகன் நல்லனோ' என்றாற் போலவும், 'இராமன் முகம் ஒள்ளிதோ முருகன் முகம் ஒள்ளிதோ' என்றாற்போலவும், ஓரினமான முதற்பொருளோடு முதற் பொருளும், சினைப்பொருளோடு சினைப்பொருளும் (இராமன், முருகன்—முதல்; முகம்—சினை) சேர வைத்தே வினுதல் வேண்டும். அன்றி, 'இராமன் நல்லனோ முருகன் முகம் நல்லதோ' என்றாற்போலவும், 'இராமன் முகம் ஒள்ளியதோ முருகன் ஒள்ளியனோ' என்றாற்போலவும் முதலும் சினையும் மயங்கிவர வினுதல் கூடாது; அங்ஙனம் மயங்கிவர விடை கூறுதலும் கூடாது. இது தெய்வச்சிலையார் கூறிய முதற் சூத்திரப்பொருளின் கருத்து.

இங்கே தெய்வச்சிலையார் உறழ்துணை என்பதற்குக்கொண்ட பொருளும், ஏனையர் அதற்குக்கொண்ட பொருளும் வேறுபாடுடையன. தெய்-துணையென்பது இணை என்றார். இணைப் பொருளாவது, இப்பொருளும் இப்பொருளும் இன்னதன்மையுடைமையால் ஓரினமென்று சுட்டத்தக்கன என்னும் இனச்சுட்டினை உடையது ஆகும். துணை, இணை, இனம் என்பன ஒரு பொருளன என்பது இவர் கருத்து. வெண்டாமரையும் செந்தாமரையும் தாமரை என்ற சாதியால் இனம் உடையனவாகும். இத்தகைய இனம் உடைய பொருள்களை இணைத்துச் சீர்தூக்கி, அவற்றின் உயர்வு, தாழ்வு, ஒப்பு இம்மூன்றனையும் ஆராய்வது உறழ்தல் என்பது இவர் கருத்து.

இவ்வுண்மைகளை, அடுத்த 18-ஆம் சூத்திரத்தே, 'உலகத்துப்பொருளெல்லாம் இனச்சுட்டுடையவும் இனச்சுட்டில்லவுமென இருவகைப்படும். அவற்றுள் இனச்சுட்டுடையன, உறழ்ச்சிவகையுள் (16, 17-ஆம் சூத்திரங்களுள்) அடங்குதலின், இனச்சுட்டில்லாத பொருண்மேற் செப்பு வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று' எனப் பதினெட்டாம் சூத்திரம் நுதலியது கூறுவதனாலும், வேற்றுமையியலில், 'இயற்கையின்'-என்று தொடங்கும் 18-ஆம் சூத்திரத்துள்ள 'கருவியில் துணையில் கலத்தில்'-என்றவிடத்து, 'துணை-நட்பின்மேல் வரும்.'....பகையும் கொள்க. மாறுபாடும் இனம் ஆகுமோ எனின், மாறுபாடும் அப்பொருள் குறித்தலின் இனமாம்' என்பதனாலும் அறிக.

ஆனால், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் உறழ்துணை என்றவிடத்து மேற்கூறியாங்கு, உறழப்படும் (இனப்) பொருட்கண் எனப்பொருள் கொள்ளாமல், உறழ்பொருளும் ஒப்புப்பொருளும் ஆயபொருள் என இரண்டு வகையாகப் பிரித்துப் பொருள் உரைத்திருக்கின்றனர். இளம்பூரணர், சூத்திரத்திற்குப்பொருள் கூறுமிடத்து, மேற்கூறியாங்கு இருவகையாகப் பிரித்துக் கூறுவிடினும், துணையென்பதனை அங்கே ஒன்றுங்கூறாது விட்டு விட்டுப் பின்னோரிடத்தே எடுத்து, அது மிகையன்று, உவமப் பொருளைக்காட்டுமெனக் கூறிச், சேனாவரையர் நச்சினார்க்கினியர் இருவரும் அவ்வாறு உறழ்பொருள், ஒப்புப்பொருள் என இருவகையாக உரை எழுதுவதற்கு மூலகாரணராயிருத்தலை அவ்வுரையிற் காணலாம்., எனவே இம்மூவரும் ஒத்த கருத்தினராதல் பெறப்பட்டது காண்க.

பொருவுதல், உறழ்தல் இரண்டும் ஒருபொருளன என்பதும், அவை, மிகுதல் குறைதல் ஒத்தல் என மூவகையும்பற்றி வருமென்பதும் தெய்வச்சிலையார் கொள்கை. பொருவுதல்,—உறழ்தல் ஒத்தல் என இருவகைப்படுமென்பதும், அவற்றுள் உறழ்தல்—மிகுதல் குறைதல் என இருவகைப்படுமென்பதும், இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கொள்கை. இவ்வுண்மைகளை இங்குக் கூறிய 16, 17 ஆம் சூத்திரங்கட்கும்,

வேற்றுமை இயலில் ஐந்தாம் வேற்றுமைச் சூத்திரங்கட்கும் அவரவர் உரைத்திருக்கும் உரைகளாலும் எடுத்துக் காட்டுக் களாலும் அறியலாம். இக்கொள்கையே யுடைய நன்னூலார் உறழ்தலை நீங்கலிலடக்கி, ஒத்தலை ஒப்பு என்று கூறினர். நன்னூல் உரைகளைக் காண்க.

இக்கூறியவற்றால், சூத்திரப்பொருள் கூறுமிடத்திற்றானே, உறழ்துணைப்பொருள் என்றவிடத்து இவ்விருவகை உரைகளும் பிரிந்து வேறுபடுதல் காண்க. சுருங்கக்கூறின், உறழும் இன மாகிய பொருள் என்பது தெய்வச்சிலையார் உரை. உறழ்வும் ஒப்பும் ஆகிய பொருள் என்பது பிறர் உரை. உறழ்துணை-(உறழப்படும் துணை) செயப்படுபொருட் பெயர்கொண்ட வினைத் தொகை. உறழ்துணை—(உறழ்வும் துணையும்) உம்மைத்தொகை. உறழ்துணை என்பனவற்றிற்கு இவ்விருவரும் கொண்ட பொருள் கள் வேறு வேறு என்பதும், எனவே, அவையடியாக விரியும் வேறுபாடுகள் பல என்பதும் காண்க.

II

முதல், சினை—என்ற இரண்டினையே சூத்திரத்திற் கூறி யிருப்பினும் முதல் என்றதனால் அதனைச்சார்ந்து வருவன பிறவும் கொள்ளப்படும். அவை, இந்நிறமோ அந்நிறமோ நல்லது, பண்பு; இந்நடையோ அந்நடையோ நல்லது, தொழில்; இன்றோ நாளையோ வாழ்வு, காலம்; இந்நிலமோ அந்நிலமோ விளைவது, நிலம்; என்பது தெய்வச்சிலையார் உரை. இவற்றுள் குணம் ஒன்றினையே இளம்பூரணர் கொண்டனர். சேனாவரையர் நச்சி னார்க்கினியர் இவைபற்றி இங்கு ஒன்றும் கூறினாரல்லர். இவை இங்கு மற்றொரு வேறுபாடாதல் காண்க.

III

இவைகள் உறழுமிடத்து, 'இராமனது வலக்கை அழ கிதோ இடக்கை அழகிதோ' என ஒரு பொருளினிடத்தும், 'இராமன் முகம் அழகிதோ முருகன் முகம் அழகிதோ' எனப் பிறபொருளிடத்தும் வரும், தெய்-உரை. இக்குறிப்பினைப் பிறர் கூறினாரல்லர். இஃது இங்குப் பிறிதோரு வேறுபாடு.

இத்துணையும் காட்டியவற்றால், குறிப்புரையாளர் கொண்டவாறு 16-ஆம் சூத்திரத்துள்ளும், இருதிறத்தார் உரை முதலியவைகள் யாவும் முற்றும் வேறுபாடுடையனவாதலைக் கண்டு கொள்க. எனவே, ஆழ்ந்து நோக்கின்—வேறுபட்டதன்று எனல், எவ்வாற்றானும் பொருந்தாமை காண்க. இனி, தெய்வச்சிலையார்உரை, 17ஆம் சூத்திரத்தினுள்ளும் தொடர்ந்து செல்லுவதும், அங்கு ஏனையோருடன் முற்றும் வேறுபடுவதும், இவ்விரு சூத்திரங்களிலும் உள்ள தெய்வச்சிலையார் உரைகள் ஒருசேர இணைந்து ஏனையோர் உரைகளின்றும் முற்றும் வேறுபட்டனவாவதும் காட்டுவேன்.

IV

மேற்கூறியவாறு முதல் (பொருள்) சினை, இடம், காலம், குணம் தொழில் ஆய இவைகளில் ஓரினத்தைச் சார்ந்தனவற்றையே இணைத்துச் சீர்தூக்கவேண்டும் என்னும் விதிக்கு விலக்கு உண்டு. அது:—ஒத்த குணம் உடையவையாயினும், ஒத்ததொழில் உடையவையாயினும், அவற்றை முதல்சினை முதலாய வேறுபாடு கருதாது, ஓரினமானவை என்றேகொண்டு சீர் தூக்கலாம் என்பது. உதாரணம் — ‘இந்நங்கை கண் நல்லவோ, இக்கயல் நல்லவோ’ எனவும், ‘இம்முகிலோ இவன் கையோ கொடுக்கவல்லது’ எனவும் வருவன. இங்கே, நங்கை கண் சினை; கயல் முதல். ஆயினும் (வடிவப்) பண்பு ஒத்திருத்தலின், வழுவமைதியாய்ப் பொருந்துவதாயிற்று. முகில் முதல்; கைசினை. ஆயினும், கொடைத் தொழிலின் ஒத்தலின், வழுவமைதியாயிற்று. இங்குக் கூறிய பண்பும் தொழிலும், தகுதியும் வழக்கும் (17) என்றவிடத்துள்ள தகுதியாகும் என்பது தெய்வச்சிலையார் உரை. இவ்வுரையினை எவரும் கொண்டிலர்; முற்றும் மாறுபட்ட மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக் குறிகளைத் தகுதி என்றனர். இங்ஙனம் வருபவற்றைச் செய்யுளாயின் உவமவழுவென்றும், வழக்காயின் உரையென்னும் செய்யுளென்றும், ஐயவுவமை வாய்பாட்டாற் புனைந்துரைத்தனவென்றும் சேனாவரையர் உரைத்தனர். இங்குள்ள வேறுபாடுகளையெல்லாம் அறிக.

V

தெய்வச்சிலையார் 17ஆம் சூத்திரத்துள்ள 'தகுதியும்வழக்கும்' என்பதிலுள்ள வழக்கு என்பது, இன 'ஒப்புமையின்றி உலகத்தார் பயில வழங்கப்படுவது' எனக்கூறி, அதற்கு, கரிதோ வெளிதோ, இருப்பேனே போவேனே, ஊரோ காடோ, பகலோ இரவோ, தேவராய் வாழ்தல் நன்றோ, நரகத்துள் உறைதல் நன்றோ-என்றெல்லாம் உதாரணம் காட்டுவாராயினர். இதுபற்றிப் பிறரெவரும் ஏதும் கூறினாரல்லர்; ஆனால் வழக்கு என்பது, இலக்கண வழக்கு, மரூஉ என்றும், அவற்றை மறுத்துக் 'காரணமின்றி வழங்கற்பாடேபற்றி வருவ'தென்றும் கூறி இங்ஙனம் முற்றும் வேறுபட்ட உரைகள் கூறினர். இங்குள்ள வேறுபாடுகளேல்லாவற்றையும் அறிந்து கொள்க. இடம் போதாமையின் இன்னும் விரித்திலேன்.

சுருங்கக் கூறின், மேற்கூறிய I முதல் V வரையிலுள்ள பொருள்களே தெய்வச்சிலையார் உரையிற் கண்ட பொருள்கள். அவை ஐந்தும் ஏனையர் உரைகளினின்றும் முற்றும் வேறுபட்டன வாதல் காண்க.

இதுகாறும் கூறியவற்றாற் பெறப்பட்டன, தெய்வச்சிலையார் அடிக்குறிப்பு, எழுதுங்காலை, 16, 17ஆம் சூத்திரத்து மூலப்பொருள்களைமட்டும் இணைத்தெழுதிய சுருங்கிய அடிக்குறிப்பாகும் என்பதும், என்றாலும் "முதற்கோணல் முற்றுங் கோணல்' என்றவாறு, அங்குள்ள உரைகள் என்பதற்கு மூலப்பொருள் முதலிய எல்லாவற்றையும் கொண்டாலும், இவ்விரு சூத்திர உரைகளெல்லாவற்றையும் இணைத்து நோக்கினும், அன்றி ஆங்காங்கு நோக்கினும் முற்றும் வேறுபட்டவைகளே யாகும் என்பதும், குறிப்புரையாளர் கருதியவாறு 16ஆம் சூத்திர அளவில் பிரித்துப் பார்த்தாலும் 'வேறுபட்டதன்று' என்பது சிறிதும் பொருந்தாதென்பதும் ஆகும்.

எனவே, குறிப்புரையாளர் தமது அடிக்குறிப்பிற் காட்டிய ஆழ்ந்த நோக்கம் யாண்டையது! என்க.